1990 சனவரி 19]

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம்..

*6928. டாக்டர் எஸ். சுந்தரராஜ் :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி டிவிசன் வேளாண்மைத் துறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் (DPAP) 1988–89 ஆம் ஆண்டு செலவு செய்யாமல் திருப்பி அனுப்பிவிடப்பட்ட பணம் எவ்வளவு?

(ஆ) எதனால் திருப்பி அனுப்பப்பட்டது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இசைவுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சற்று நீட்டிக்கப் பெறுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 1988–89 ஆம் ஆண்டு, பரமக்குடி டிவிஷனிலிருந்து கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக என்னிடம் தகவல் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் எப்பொழுதுமே வறட்சியாகத்தான் உள்ளது. வெள்ளம் வந்தால்தான் பயிர் விளையக்கூடிய சூழ்நிலை உள்ளது இது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களுக்கே நன்கு தெரியும். வெள்ளம் வரவில்லை என்றால் நிரந்தரமாகவே பஞ்ச மாவட்டமாகவே இருக்கிறது. அவ்வாறு இருக்கும் பஞ்ச மாவட்டத்தில், ஐந்து ஒன்றியங்கள் அடங்கிய பரமக்குடி டிவிஷனில் இரண்டு ஒன்றியங்களை மட்டும் எடுத்து, அந்த இரண்டு ஒன்றியங்களில் வேலைக்கு அதிகமாக ஆட்கள் இல்லாததால் அந்தப் பணம் திருப்பி அனுப்பப்பட்டதாக வேளாண்மைத் துறை அலுவலகத்தில் என்னிடம் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் இருக்கிறது. அவ்வாறு இருக்கும்பொழுது அந்தப் பணத்தை மக்களுக்குக் குறிப்பிட்ட சமயத்தில் விதை, உரம் போன்றவைகளை வழங்குவதற்கு அதிகமாக ஆட்கள்—அரசு அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, 1988–89 ஆம் ஆண்டில் பரமக்குடி கோட்டத்திற்கு 1,42,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகையில் 1,41,500 ரூபாய் செலவு செய்யப்பட்டு மீதமுள்ள தொகை நடப்பாண்டில் 1989–90 இல் செலவு செய்யப்பட உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவரவர்களே, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல. வேலையை மேலே வைத்து, தொகையைக் கீழே கொண்டு செல்லுகின்ற விவசாய அலுவலர்களை நீக்கிவிட்டு, விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு விவசாயப் பல்கலைக் கழகத்திலும், விவசாயத் துறையிலும் முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

அணை கட்டும் திட்டங்கள்.

* 2077. திரு. அ. மாரிமுத்து:
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வானூர் தொகுதியில் கழுவெளி என்றழைக்கும் பகுதியில் புலியங்கால் ஓடையின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கழுவெளி பகுதியில் ஏறக்குறைய 25 ஆண்டுக் காலமாக சுமார் 25,000 ஏக்கர் விளை நிலங்களின், வெள்ளக் காலங்களில் நீர்ப் பிடிப்பினால் பாதிக்கப்பட்டு, அவ்வப்பொழுது இந்தக் கேள்வியை எழுப்புவதும், அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை மோசமாக இருக்கிறது, பரிசீலிக்கப்படும் என்று பதிலைக் கூறுவதும் தொடர்ந்து வழக்கமாக இருந்து வருகிறது. எனவே, நிரந்தரத் தீர்வு கண்டு அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்கள் பலன் பெறுகின்ற வகையில் நிரந்தரமான ஒரு பரிகாரத்தை அரசு செய்து தருமா என்று சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.